# முடிவுரை

# முடிவுரை

ஐஞ்சிறு காப்பியங்களில் மகளிர்நிலை பற்றி ஆராயும் இவ்வாய்வேடு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் இயலான **'காப்பியங்கள் காட்டும் குடும்பம்'** என்ற இயல் விளக்கும் செய்திகளாவன

1. குடும்ப வாழ்விற்கு அடித்தளமாக இருப்பது காதல். அக்காதலானது உள்ளத்தில் ஊடுருவி அன்பின் மூலம் வெளிப்படுகிறது. ஆடவர் தன் காதலை உடனே வெளிப்படுத்தியதைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
2. மகளிர் காதலை ஏற்றுக் கொண்டு, அதைத்தம் பெற்றோருக்குத் தெரிவித்து, அவர்களின் சம்மதத்துடன் ஆடவரை வேள்வி முறைப்படி திருமணம் செய்து கொண்டனர் என்பதும் விளக்கப்படுகிறது.
3. பெற்றோரும் தம் மகளுக்கு அனைத்தும் கற்றுத் தெரிந்த வல்லுநர்களைக் கேட்டுத் தெரிந்தும், தன் கண்களால் கண்டும், வீரத்தில் சிறந்த ஆடவரையே தன் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.
4. யசோதர காப்பியத்தில் அமிர்தமதி காம உணர்வால், கணவனை ஒதுக்கிவிட்டு, யானைப் பாகனுடன் உடலுறவு கொண்டாள். அவன் மீது உள்ள காதலால்தான், தன் உள்ளத்தின் ஆசையைக் கட்டுப்படுத்த முடியாமல் அவ்வாறு நடந்து கொண்டாள்.
5. மற்ற காப்பியத்தில் பெண்கள் பொறையுடன் திகழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவர்கள் தன் கணவன், மற்ற பெண்களைத் திருமணம் செய்த போதிலும், தன் கணவன்பால் உள்ள அன்பால் அதைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டனர்.

6. திருமணம் என்பது பாலின நிறைவுக்கு அப்பாற்பட்ட குடும்பவாழ்க்கையைக் குறிப்பது என ஐஞ்சிறு காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது.

7. திருமணத்திற்குப் பின் பெண் பிறந்த வீட்டில் உடனுறைந்து வாழவில்லை.

8. ஐஞ்சிறு காப்பியத்தில் பெண்களை உயர்வாக மதித்தனர் என்று கூறவும் முடியாது. மதிப்பு கொடுக்காமல் விட்டுவிட்டனர் என்று சொல்வற்கும் இடமில்லை.

9. மனைவியர் ஈன்றெடுத்த ஆண் குழந்தையை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். தன் கருவூலத்தைத் திறந்து அதில் உள்ள செல்வங்களை, உலகில் உள்ள மக்களுக்கு எல்லாம் தானமாகக் கொடுத்து மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். மேலும் குழந்தைகளைக் குறைந்த எண்ணிக்கையில் பெற்றுக் கொண்டனர்.

10. பெண் குழந்தையையும் வரவேற்றனர். காப்பியத்தில் பெண் குலத்தின் பிறப்பும், வணங்கப்படும் தன்மையும் இடம்பெற்றுள்ளது.

11. அதிக அளவில் பாசத்தைக் கொட்டி வளர்க்கும் தாய், தன் குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தாள். கற்பைத் தன் உயிராகப் போற்றி வந்தாள். கற்பு என்னும் வரையறை பெண்களுக்கு வலியுறுத்தப்பட்டது. ஆடவருக்கு கூறப்படவில்லை. அதனால் ஆண்கள் பொறுப்பற்று பல பெண்களை மணந்தனர்.

12. ஐஞ்சிறு காப்பியத்தில் மகளிர் ஆடவருடன் ஒத்திசைந்து வாழ்ந்ததுடன் அவர்களால் ஏற்படக்கூடிய துன்பத்தைப் பொறுத்தும் வாழ்ந்து வந்துள்ளனர். கணவன்பால் கொண்ட ஊடல், சினம் போன்ற காரணங்களால் மனைவியர், கணவரை விடுத்துப் பிரிந்து சென்றனர்

என்றோ? வேறு ஆடவரை மணம் புரிந்தனர் என்றோ? குறிப்பிடப்படவில்லை.

13. கனவு மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்தனர். காப்பியத்தில் மகளிர் தாம் கண்ட கனவின் பயனை, கனவு நூல் தெரிந்த வல்லுநர்களிடம் கேட்டுத் தெரிந்து, அது நனவில் நடக்கும் என்றும் நம்பியிருந்தனர்.

14. சீதனம் கொடுத்து தம்வீட்டுப் பெண்களை, மாப்பிள்ளை வீட்டாருக்கு மணம் முடித்து கொடுத்ததால், அக்காலத்தில் சீதனம் வழங்கியமை இருந்தது எனலாம்.

இவ்வியலில் ஐஞ்சிறு காப்பியங்களில் காணப்படும் குடும்பம் குறித்தும், பெண்களின் சிறப்பு குறித்தும் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இயலான **'மகளிரின் பாத்திரப்படைப்பு'** என்ற தலைப்பு வெளிப்படுத்தும் செய்திகள் வருமாறு

1. நற்பண்பு நிறைந்தவர்களைக் கதைத்தலைவிகளாகப் படைப்பதன் வாயிலாகக் சமுதாயத்தில் நல்லவர்களை உருவாக்க முடியும் என்ற ஆசிரியரது கருத்து தெளிவாகிறது.
2. எளிமையும், கடமை உணர்வும், வாழ்க்கையில் பயன்தரும் என்பதைக் காப்பியம் காட்டுகிறது.
3. ஒழுக்கம் தவறிய பெண்களைப் படைத்து, அவர்களுக்குத் தண்டனை அளிப்பதன் வாயிலாகப் பெண் ஒழுக்கத்துடன் வாழ வேண்டியது இன்றியமையாதது என்பது உணர முடிகிறது.
4. பயிரிடையே இருக்கின்ற களைகளை அகற்றுவது போல தீயோரைப் படைத்து அவர்களை விலக்கி சமுதாயத்திற்கு நற்பயன் தருவதையும் காணலாம்.

5. ஒருவர் செய்த நன்மையின் மூலம் வெற்றியும், தீமையின் மூலம் தோல்வியும் காணமுடிகிறது.
6. கணவர் அன்பில் குறைந்தாலும், மற்ற மனைவியர் பால் சென்றாலும், உண்மையான அன்பு கொண்ட மகளிர், தாம் கொண்ட அன்பு மாறாமல் இறுதி வரை கணவருடன் ஒழுகி வாழ்ந்தனர் என்பதைக் காப்பியங்கள் காட்டுகின்றன.
7. அச்சம், நாணம், பொறை, கற்பு, வீரம், கொடைத்திறன், விட்டுக்கொடுத்தல் போன்ற பண்பு நலன்களில் காப்பிய மகளிர் சிறந்தவராய் விளங்கி வந்தனர் என்பதை அறிய முடிகிறது.
8. 'சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை' என்பதற்கேற்ப, தன் கணவனை ஒரு பொறுப்புள்ள மன்னனாக மாற்ற, தான் இறந்து விட்டதாக நடித்து வாசவதத்தை கணவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறாள்.
9. தான் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற மனஉறுதியுடன் பெண்கள் வாழ்ந்து வந்தனர்.
10. தன் உயிரையும் பொருட்படுத்தாமல், குழந்தையைக் காப்பாற்றும் பொருட்டு குளத்தில் குதிக்கிறாள், ஒரு தாய், அவளின் தன்னலமின்மையை உணர முடிகின்றது.
11. செல்வத்திற்குரிய தெய்வமாகிய திருமகளை ஒத்தவர்கள் என்று ஒவ்வொரு தேவியரும் சிறப்பித்துக் காட்டப்படுகின்றனர்.
12. 'கடவுளால் முடியாதது ஒன்றுமில்லை' என்பதை உணர்ந்து காப்பிய மகளிர் தெய்வநம்பிக்கையும் பக்தியும் கொண்டு வாழ்ந்தனர். மேலும் நோன்பு இருந்தும் தன் குடும்பத்திற்கும், தம் நாட்டு மக்கள் நலத்திற்கும் நல்லது நடக்க கடவுளை வழிபட்டு வந்தனர்.

13. தலைவியின் தோழியர்களும் நற்குணம் கொண்டவர்களாக விளங்கினர். தேவி தவறான பாதையில் செல்கிறாள் என்பதை உணர்ந்து, அதை பொறுமையுடன் அரசிக்கு சுட்டிக்காட்டும் தோழியைக் காணமுடிகிறது.
14. பிறர் குற்றங் குறைகளைப் பொறுத்துக் கொள்ளும் பாங்கில் பெண்கள் பொறுமையும், சகிப்புத் தன்மையும் கொண்டு விளங்கினார்கள்.
15. ஒரு பெண்ணின் உருவத்தைப் பார்த்த மாத்திரத்தில் தன் மனமாகிய திரைச்சீலையில் ஓவியமாக வரைந்து அதைப் பிறகு வரைந்துக்காட்டி மகிழ்ந்தனர். எனவே பெண்கள் ஓவியத்திலும் சிறந்து விளங்கியது தெள்ளத் தெளிவாகிறது.
16. தன் கணவன் இறந்த செய்தியைக் கேட்டவுடன் போர்க்களத்திற்குச் சென்று பார்க்கும் வீரம்கொண்டவர்களாகப் பெண்கள் விளங்கினர். பின்பு கணவனிடம் மிகுந்த அன்பு கொண்ட மகளிர் அவரின் இறப்பைத் தாங்க மாட்டாமல் உயிரையும் விட்டனர்.
17. பிறருக்கு உதவும் குணம் கொண்டவர்களாக விளங்கினர். காப்பிய கால மகளிர். ஆபத்துக் காலத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன் என்ற வள்ளுவரின் வாக்குப்படி, பெண்கள் பல இடங்களிலும் பிறர்க்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்களாக விளங்கினர்.
18. ஒவ்வொரு பெண்ணும் கற்பில் அருந்ததியை ஒத்து வாழ்ந்து வந்தனர் என்பதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். கணவன் பலதவறு செய்தாலும், அதைப் பொறுத்துக் கொண்டு மனைவியர்கள் தன் கற்பில் பிறழாமல் வாழ்ந்து வந்தனர்.
19. பேய் உருவத்தில் வாழ்ந்த பெண்ணும், முனிவரின் சொற்கேட்டு, நற்குணம் கொண்ட பெண்ணாக மாறிவிட்டாள் என்பது விளங்குகிறது.
20. தீய குணங்களாக விளங்கும் பொறாமை, கோபம், கொலை செய்தல் ஆகிய குணம் கொண்ட பெண்களையும் படைத்துள்ளார் ஆசிரியர்.

ஆனால் அவர்களுக்கு நற்பெயர் சமுதாயத்தில் கிடைக்கவில்லை. அவர்களுக்கு நல்லதும் நடக்கவில்லை என்பதை விளங்க வைக்கிறார்.

21. பழிவாங்கும் குணம் கொண்டவர்களாகவும் பெண்கள் விளங்குகிறார்கள். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்துடன் தைரியமும், மனஉறுதியும் கொண்டவர்களாகப் பெண்கள் விளங்கினர் என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

இவ்வியலில் பெண்பாத்திரங்களின் குணநல்னகளும், செயல்திறனும் ஆராய்ந்துரைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலான ‘ **பெண்களின் ஒப்பனைத்திறன்**’ நுவலும் செய்திகள் வருமாறு.

1. காப்பியத்தில் மகளிர் உயர்தர பட்டாடை அணிந்து தன் குலப் பெருமையை எடுத்துக் காட்டினர்.
2. இயற்கை அணிகள், பண்டைத்தமிழ் மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வைச் சுட்டுகின்றன. அறிவியல், நாகரிக வளர்ச்சியால் பின்னர்த் தோன்றிய செயற்கை அணிகளுக்கு அவ்வியற்கை அணிகளே அடிப்படையாய்த் திகழ்கின்றன.
3. பெண்களின் கலைத்திறன் தொடர்பாக இலை, தழை இவற்றை ஆடைகளாகவும், அணிகலன்களாகவும், அணிந்தமை தொல்மரபின் எச்சங்களாகக் காணப்படுவதாகக் குறிக்க முடிகிறது.
4. சிவந்த பட்டாடைகளையும், பூவேலைப்பாடு அமைந்த ஆடைகளையும் பெண்டிர் அணிந்து கொண்டனர்.
5. மகளிர் பண்டைக்காலத்தில் வயிரம், மரகதம், முத்து, பவளம், மாணிக்கம், நீலம், கோமேதகம் ஆகியவற்றால் அணிகலன்கள் செய்து அணிந்து கொண்டனர்.

6. ஐஞ்சிறு காப்பிய மகளிர் நெற்றிச்சுட்டியை நுதல் அணியாகவும், குழை, பொலங்குழை, மகரக்குழை போன்றவற்றைக் காதணியாகவும் பயன்படுத்தினர்.

7. முத்து வளையல்களைக் கையணியாகவும், மேகலையை இடையணியாகவும் அணிந்திருந்தனர்.

8. மகளிர் கழுத்தணியாக, சங்கு பவளம், முத்து, பொன், இரத்தினம் ஆகியவற்றால் செய்யப்பட்ட பல வகையான சங்கிலிகளையும், தொங்கும் பதக்கங்களையும் காப்பிய மகளிர் விரும்பி அணிந்தனர்.

9. சிலம்பு, கிண்கிணி போன்ற காலணிகளையும் அணிந்து நடக்கும்போதும், விளையாடும் போதும், காலில் அணிந்திருக்கும் சிலம்பொலி இனிய தேவ கீதங்களாகத் தோன்றின.

10. சிலம்பின் மூலம் நன்மையும், தீமையும் அடைந்தனர் பெண்கள் என்பதை அறிய முடிகிறது.

11. காப்பிய மகளிர் தம்முடைய கூந்தலை நீண்டதாக வளர்த்தும் அதைப் பராமரித்தும், அழகுபடுத்தியும் வந்தனர். மலர் சூடிக் கொள்வதிலும் சிறந்த அழகியற் கலைஞராக விளங்கியுள்ளனர்.

12. கூந்தலைத் தூய்மைப்படுத்தி, அகிற்புகையால், புலர்த்தி, கூந்தலை நறுமணம் மிக்கதாக வைத்துக் கொண்டனர்.

13. கண்களுக்கு மை (அஞ்ஞனம்) தீட்டலும் நுதலுக்குத் திலகமிடுதலும் காணப்பட்டன. முகத்திற்கு சந்தனம், சுண்ணம் ஆகிய வாசனைப் பொருளை தாமே தயாரித்து பூசிக் கொண்டனர்.

14. தொய்யில் பெண்களுக்கே உரிய ஒப்பனையாகத் திகழ்கிறது நகம், கை, கால் விரல்களுக்குச் செம்பஞ்சால் நிறமூட்டுதலும், தோள் நகில்களில் தொய்யில் எழுதலும் காப்பியகால மகளிரின் ஒப்பனைக்குரிய செயல்களாயின.

15. சந்தனக் குழம்பாலும், குங்குமக் குழம்பாலும் தன் மார்பில் ஓவியமாகப் பூங்கொத்துகளை வரைந்து அழகுபடுத்திக் கொண்டனர்.
16. அகிற்புகையாலும், நறுமணப் பொருட்களாலும் தம் இல்லங்களையும், பள்ளியறையையும் மணம் மிக்கதாக வைத்துக் கொண்டனர்.
17. ஒப்பனைக்கு கிடைக்கும் மணப்பொருட்களையும் வண்ணச் சாந்துகளையும் காப்பிய மகளிர் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.
18. காப்பிய மகளிர் ஆடை, அணி, ஒப்பனையில் ஒரு மரபு வழியிலான பண்பாட்டு வெளிப்பாடு காணப்படுகிறது. மேலும் அதன் மூலம் தமிழ்ப் பண்பாட்டை, பாரம்பரியத்தை நாகரிகத்தைக் காத்தனர் என்பது தெரிகிறது.
19. ஆடை உடுத்தலும், அணி புனைதலும் ஒப்பனை செய்தலும் மங்காப் பெண்மைக்குரிய இன்றியமையாச் செயல்களாகும்.

இவ்வியலில் ஐஞ்சிறு காப்பிய மகளிரது ஒப்பனைத் திறன் ஆராயப்பட்டு, பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் ஆர்வமுடையவர்களாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நான்காவது இயலான **'காப்பியம் காட்டும் சமுதாயம்'** தரும் செய்திகளாவன

1. காப்பியக் காலம், குடும்பம், சமுதாயம் என வளர்ச்சி அடைந்த அமைப்பினைக் கொண்டதாக விளங்கியது.
2. காப்பியக் காலக் குடும்பம் ஒருவன்-ஒருத்தி என்னும் அமைப்புடைய தனிக்குடும்பமாக விளங்கியது.

3. பரத்தையர்கள், அவர்கள் தொடர்பு கொண்டுள்ள ஆடவனின் மனைவியொடு ஒத்த தகுதியோ, உரிமையையோ, அவனது சொத்தில் பங்குபெறும் உரிமையையோ, பெறவியலாது என்பது தெரிகிறது.

4. நீராடுதலால் உடலழுக்கு நீங்கித் தூய்மையாகும், என்பது போல, விலை மகளிர் தாம் செய்த பாவத்தைப் போக்க முற்படும்பொழுது, துறவறத்தில் ஈடுபட்டால் பாவம் நீங்கி மனம் தூய்மை அடையும் என்று கருதினர்.

5. கலைநலம் சிறந்த மகளிர், தாம் கற்ற இயல், இசை நாடகக்கலைகள் சமுதாயத்தில் பரவிப் பயன் நல்க வழி செய்தனர்.

6. கூத்தாடும் பெண்கள், பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஆங்காங்குள்ள பேரரசர், சிற்றரசர் குறுநில மன்னர்கள் ஆகியோரின் அவை முன்பு ஆடியும் பாடியும், நடித்தும் தங்களின் கலைத்திறத்தால் அவர்களை மகிழ்வித்து பரிசுகளைப் பெற்று வந்தனர்.

7. சூளாமணி காப்பியத்தில் குரவைக் கூத்தாடித் தோழியர்கள் அரசியர்களை மகிழ்ச்சிப்படுத்தினர். ஆயர்குல மக்களால் தனியாகவும், குழுவாகவும் ஆடப்பெற்ற இக்கூத்து காப்பியத்தில் சிறந்து விளங்கியது.

8. மகளிர் மட்டுமின்றி, பேய்களும் கூத்தாடியது. நீலகேசியில் இறந்தவர்களின் உடலைத் தின்னும் பொருட்டு இடுகாட்டில் பேய்கள் துணங்கைக் கூத்துக்களை ஆடி மகிழ்ச்சி கொண்டன.

9. ஆடல் மகளிர், தெய்வ உணர்வையும், சமய அறிவினையும் ஏற்படுத்தும் அரும்பெரும் சாதனமாக ஆடற்கலையைக் கையாண்டனர். மேலு் ஆடல் மூலம் மக்களை மகிழ்ச்சிப்படுத்தியும், அவர்களை இறைப்பற்றில் ஈடுபடுத்தும் பண்பும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர்.

10. யசோதர காப்பியத்தில் மன்னனை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில், நடனம் ஆடினர். மேலும் அவர்கள் பலவிதமான நடனத்தையும் ஆடி சிறப்பு பெற்றார்கள்.

11. இசைக்கலையில் சிறப்புடையோர் மகளிரேயாவர். யாழ், குழல் போன்ற கருவிகளை வாசிக்கும் பொழுது பறவைகளும் மயங்கி விழுந்தன. வானத்து தேவர்களும், அவ்விசையைக் கேட்டு, இசையரங்கத்திற்கு வந்து அங்கிருந்தோருடன் சேர்ந்து மகிழ்ந்தனர்.

12. இறைவனின் புகழை, திருநாமங்களை இசையோடு இணைந்த பாடல்களாகப் பாடி வணங்கினர் காப்பியகால மகளிர்.

13. பண் அமைந்த இசைப்பாடல்களைப் பாடி, திவிட்டனையும், சுயம்பிரபையையும் மகிழ்ச்சிப்படுத்தினர்.

14. மன்னர் தம் மனைவியர்க்கு கோப்பெருந்தேவி என்ற பட்டமளித்து சிறப்புச் செய்தனர். அரசியலில் பெண்களுக்கு இருந்த மதிப்பையும், செல்வாக்கையும் அறிய முடிகிறது.

15. ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி என்று கண்ணகியைப் பாராட்டியதைப் போன்று, மானனீகை தம் பந்தாட்டத்தில் அனைவரின் அன்பைப் பெற்றாள்.

16. நீலகேசி தன் உற்றார், உறவினர் என்று நினைக்காமல் உலக மக்கள் அனைவரிடமும் தன் அறக்கருத்துக்களை எடுத்துரைத்தாள். அதனால் மக்கள் அனைவரும் அவள் மீது அன்பு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர்.

17. மேலும் மக்களிடம் உள்ள பொறாமை, சினம் முதலிய அழுக்குகளை நீக்கி, தூய்மையான மனத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தினாள். அவ்வகையான மனத்தூய்மையே அறம் பொருந்திய செயல்கள் செய்வதற்கு ஏற்றது என்று வலியுறுத்தினாள்.

18. மனித மனத்தில் அறம் மேலோங்க, தீய உணர்வுகள் மங்கி மறையும். மனித நேயம், பிறர் நல உணர்வு, ஒப்புரவு நோக்கு என்பன அறச் செயல் புரியத் துணைபுரியும் என்றாள் நீலகேசி.

19. விழாக்கள் மக்களை ஒன்று சேர்த்து மகிழ்ச்சி கொள்ள வைக்கிறது. நீர்விழாவின் போது ஊர் மக்கள் அனைவரும் பொய்கையில் நீராடினர். அதனால் இனி துன்பம் நெருங்காது என்ற மனநிலையோடு நீரை வாழ்த்தியும், வரம் வேண்டியும், வளம் வேண்டியும் நீராடினர் என்பது தெரிகிறது.

20. விழாக்கள் காப்பியக்கதைக்கு உத்தியாக அமைந்த போதிலும், அக்காலச் சமுதாயத்தில் நம்பிக்கை, நாகரிகம் பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றை விளக்கும் சான்றுகளாக அமைகின்றன.

21. உதயணகுமார காவியத்தில், நான்கு மனைவியரும், சூளாமணி காப்பியத்தில் உள்ள மனைவியரும் நாககுமார காப்பியத்தில் உள்ள மனைவியும் துறவு மேற்கொண்டனர்.

22. கணவன் மீது அன்பு கொண்டவர்களாகப் பெண்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது புலப்படுகிறது. பெண்களும் துறவு மேற்கொண்ட விதத்தை காப்பியங்கள் எடுத்தியம்புவதை அறியலாம்.

23. அரச மகளிர் உடல் ஆரோக்கியத்திற்காக விளையாட்டினைப் பயன்படுத்தினர்.

24. ஐஞ்சிறு காப்பிய மகளிர் கடவுள் மீது பக்தி கொண்டு வாழ்ந்து வந்தனர்.

இவ்வியலில் காப்பியம் காட்டும் சமுதாயம் ஆராயப்பட்டு சமுதாய நிகழ்வுகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

**ஆய்வின் பயன்களாக ஆய்வாளர் கருதுவன :-**

காப்பிய கால மகளிரில் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் கணவரோடு ஒத்திசைந்து வாழ்ந்த வாழ்க்கையை வெளிப்படுத்தியமை.

தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற பெண்களின் மனஉறுதியைச் சுட்டிக் காட்டியமை.

பெண்களின் இசைப் புலமையை வெளிப்படுத்தியமை

சமணம் மேம்பட்டிருந்த காலத்திலும் மகளிருக்கு மேன்மை இருந்தது என்பதைக் காப்பியங்களின் வழி எடுத்துரைத்தமை.

இல்லற வாழ்வில் ஈடுபட்ட பெண்களுக்கு மிகுதியான சமூகக் கட்டுப்பாடுகள் இல்லை என்பதை வெளிப்படுத்துதல்.

பெண்களின் ஒப்பனைத் திறத்தை வெளிப்படுத்தியமை.

பெண்களின் கூத்தாடும் திறத்தைச் சுட்டிக்காட்டியமை.

பெண்களின் துறவறப் பண்பை வெளிக்காட்டியமை.

**பிற ஆய்வாளருக்கு இடம் கொடுக்கும் ஆய்வுக்களங்கள் :-**

ஐஞ்சிறு காப்பியங்களில் பெண்ணியம் குறித்து ஆய்வு செய்யலாம்.

உளவியல் அடிப்படையில் ஐஞ்சிறு காப்பியங்களை ஆராயலாம்.

காப்பியக்கால மகளிரின் வாழ்வியலைச் சங்ககால மகளிரின் வாழ்வியலோடு ஒப்பாய்வு செய்யலாம்.

சமூகவியல் அடிப்படையில் ஐஞ்சிறு காப்பியங்களில் மகளிரின் உறவுமுறைகளை ஆராயலாம்.

ஐஞ்சிறு காப்பியங்களில் காணப்படும் பெண்களின் அறிவுத்திறனை பன்முக அறிவோடு ஒப்பாய்வு செய்யலாம்.